www.Padasalai.Net www.TrbTnpsc.com

வகுப்பு : 10

| தேர்வு எண் | | | | | | |
|---|---|---|---|---|---|---|

akwaacademy.blogspot.com

# இரண்டாம் திருப்புதல் தேர்வு - 2025

நேரம் : 3.00 மணி]

## தமிழ்

[மொத்த மதிப்பெண்கள் : 100

பகுதி – I (மதிப்பெண்கள்:15)

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 15X1=15

1. மரபுத்தொடருக்கான பொருளைத் தேர்க:
மனக்கோட்டை.
அ) தாமதப்படுத்துதல் ஆ) ஆற்றில் போடுதல் இ) ஆறவைத்தல் ஈ) கற்பனை செய்தல்

2. 'விருந்தினரைப் பேணுவதற்குப் பொருள் தேவைப்பட்டதால், தன் கருங்கோட்டுச் சீரியாழைப் பணையம் வைத்து விருந்தளித்தான்' என்கிறது புறநானூறு. இச்செய்தி உணர்த்தும் விருந்து போற்றிய நிலை.
அ) நிலத்திற்கேற்ற விருந்து ஆ) இன்மையிலும் விருந்து
இ) அல்லிலும் விருந்து ஈ) உற்றாரின் விருந்து

3. "அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
மருளை அகற்றி மதிக்கும் தெருளை" – என்ற இவ்வடிகளில் குறிப்பிடப்படுவது எது?
அ) தமிழ் ஆ) அறிவியல் இ) கல்வி ஈ) இலக்கியம்

4. 'பச்சை சட்டை பாடினார்' பச்சை சட்டை என்ற சொல்லுக்கான தொகையின் வகை எது?
அ) பண்புத்தொகை ஆ) உவமைத்தொகை இ) அன்மொழித்தொகை ஈ) உம்மைத்தொகை

5. நூலின் பயன் படித்தல் எனில், கல்வியின் பயன் --------
மீன் இருப்பது நீரில், தேன் இருப்பது --------
கல் சிலை ஆகுமெனில், நெல் ------- ஆகும்
விதைக்குத்தேவை எரு எனில், கதைக்குத் தேவை ------
தொடர்களைப் படித்துப் பொருத்தமான விடை வரிசைகளை விடுபட்ட இடங்களுக்கு ஏற்பத் தேர்க.
அ) பூவில்,சோறு, கரு, கற்றல் ஆ) கற்றல், சோறு, கரு, பூவில்
இ) கற்றல், பூவில், சோறு, கற்றல் ஈ) கரு, சோறு, கற்றல், பூவில்

6. 'காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்' நிலத்துக்கு நல்ல உரங்கள்
இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது.
அ) இலையும் சருகும் ஆ) தோகையும் சண்டும் இ) தாளும் ஓலையும் ஈ) சருகும் சண்டும்

7. வாய்மையே மழைநீராகி – இத்தொடரில் வெளிப்படும் அணி.
அ) உவமை ஆ) தற்குறிப்பேற்றம் இ) தீவகம் ஈ) உருவகம்

8. "உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம்
உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்". பாரதியின் இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள நயங்கள் யாவை?
அ) உருவகம், எதுகை ஆ) மோனை, எதுகை இ) முரண், இயைபு ஈ) உவமை எதுகை

9. கரகாட்டத்தைக் கும்பாட்டம் என்றும் குடக்கூத்து என்றும் கூறுவர்
இத்தொடருக்கான வினா எது?
அ) கரகாட்டம் என்றால் என்ன? ஆ) கரகாட்டம் எக்காலங்களில் நடைபெறும்?
இ) கரகாட்டத்தின் வேறுவேறு வடிவங்கள் யாவை? ஈ) கரகாட்டத்தின் வேறு பெயர்கள் யாவை?

10. பழமொழிகளைப் பொருத்துக.
அ) ஆறில்லா ஊருக்கு – 1. சோற்றுக்கு ஒரு சோறு பதம்
ஆ) உப்பில்லாப் பண்டம் – 2. நூறு வயது
இ) நொறுங்கத் தின்றால் – 3. குப்பையிலே
ஈ) ஒரு பானை – 4. அழகு பாழ்
அ) அ–4, ஆ–1, இ–3, ஈ–2 ஆ) அ–4, ஆ–3, இ–2, ஈ–1
இ) அ–2, ஆ–4, இ–1, ஈ–3 ஈ) அ–3, ஆ–1, இ–4, ஈ–2

11. இருநாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம்
அ) நாட்டைக் கைப்பற்றல் ஆ) ஆநிரைகவர்தல்
இ) வலிமையை நிலைநாட்டல் ஈ) கோட்டையை முற்றுகையிடல்

Scanned with CamScanner
Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com

பாடலைப் படித்து வினாக்களுக்கு (12,13,14,15) விடையளிக்க.

"நனந்தலை உலகம் வளைஇ நேமியோடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர் செல, நிமிர்ந்த மாஅல் போல,
பாடுஇமிழ் பனிக்கடல் பருகி, வலன் ஏர்பு"

12. இப்பாடல் இடம்பெற்ற நூல் ----- ?
அ) சிலப்பதிகாரம் ஆ) திருவிளையாடற் புராணம்
இ) முல்லைப்பாட்டு ஈ) குறிஞ்சிப்பாட்டு

13. இப்பாடலை இயற்றியவர் யார்?
அ) காரியாசான் ஆ) நல்லந்துவனார் இ) நக்கீரனார் ஈ) நப்பூதனார்

14. நேமி – பொருள் தருக.
அ) முத்து ஆ) கடல் இ) சங்கு ஈ) சக்கரம்

15. பாடலில் உள்ள சீர்மோனைச் சொற்களை எழுதுக.
அ) நனந்தலை – உலகம் ஆ) பனிக்கடல் – பருகி
இ) வலம்புரி – தடக்கை ஈ) வலம்புரி – பொறித்த

## பகுதி – II (மதிப்பெண்கள்:18) பிரிவு – 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். வினா எண் 21–க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** 4X2=8

16. விடைகளுக்கேற்ற வினாக்கள் எழுதுக.
அ) நூலின் பயன் அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு பயனுக்காக இருத்தல் வேண்டும்.
ஆ) பண்டைத் தமிழர் இல்லங்களிலும் உள்ளங்களிலும் விருந்தோம்பல் பண்பாடு செழித்திருந்தது.

17. மெய்க்கீர்த்தி பாடப்படுவதன் நோக்கம் யாது?

18. பின்வருவனவற்றுள் கூரான ஆயுதம் எது என்று செந்நாப்போதார் கூறுகிறார்? ஏன் என்பதை எழுதுக.
(பெரிய கத்தி, இரும்பு ஈட்டி, உழைத்ததால் கிடைத்த ஊதியம், வில்லும் அம்பும்)

19. பூவின் நிலைகளைக் குறிக்கும் சொற்களை எழுதுக.

20. குறிப்பு வரைக – அவையம்

21. 'செயற்கை' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 5X2=10

22. தொடரின் தடித்த சொற்களுக்கான வேறு பொருளைப் பயன்படுத்தி தொடரை மீள எழுதுக.
உலகில் வாழும் மக்களில் சிலர் கனியிருக்கக் காய் புசித்தலைப்போல இன்சொல் இருக்க வன்சொல் பேசி இன்னற்படுகின்றனர்

23. அறியேன் – பகுபத உறுப்பிலக்கணம் தருக.

24. நாற்றிசையும் செல்லாத நாடில்லை
ஐந்து சால்பு ஊன்றிய தூண்
நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி.

செய்யுள் அடிகளில் இடம்பெற்றுள்ள எண்ணுப் பெயர்களைக் கண்டு, அவற்றின் தமிழ் எண்களை எழுதுக.

25. கலைச்சொல் தருக.
அ) Sea breeze ஆ) Document

குறிப்பு: செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா சொல்லைக் கண்டுபிடித்துப் புதிரை விடுவிக்க.
(காடு, புதுமை, விண்மீன், காற்று, நறுமணம்)
அ) முதல் இரண்டை நீக்கினாலும் வாசனை தரும்; நீக்காவிட்டாலும் வாசனை தரும் ------
ஆ) பழமைக்கு எதிரானது; எழுதுகோலில் பயன்படும் --------

26. சீசர் எப்பொழுதும் என் சொல்பேச்சைக் கேட்பான். புதியவர்களைப் பார்த்துக் கத்துவானே தவிர கடிக்க மாட்டான் என்று இளமாறன் தன்னுடைய வளர்ப்பு நாயைப் பற்றிப் பெருமையாகக் கூறினார் – இதில் உள்ள திணை, மரபு வழுவமைதிகளைத் திருத்தி எழுதுக.

27. எதிர்மறையாக மாற்றுக.
அ) மீளாத் துயர் ஆ) எழுதாக் கவிதை

Scanned with CamScanner

28.விடை எத்தனை வகைப்படும்? அவை யாவை?

பகுதி – III (மதிப்பெண்கள்:18) பிரிவு – 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** 2X3=6

29. **உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.**

தற்போது வெளிவருகிற சில உயர்வகைக் திறன்பேசியின் ஒளிபடக் கருவி, செயற்கை நுண்ணறிவுத் தொழில் நுட்பத்தைக் கொண்டிருக்கிறது. கடவுச்சொல்லும் கைரேகையும் கொண்டு திறன்பேசியைத் திறப்பது பழமையானது. உரிமையாளரின் முகத்தை அடையாளம் கண்டு திறப்பது, இன்றைய தொழில்நுட்பம். செயற்கை நுண்ணறிவு, படம் எடுக்கும் காட்சியை அடையாளம் கண்டு அதற்கு ஏற்பத் தன்னைத் தகவமைத்துக் கொள்கிறது.

akwaacademy.blogspot.com

அ) திறன்பேசியைத் திறக்கும் பழைய முறைகள் எவை?

ஆ) திறன்பேசியில் படம் எடுக்கும் காட்சியை அடையாளம் கண்டு செயற்கை நுண்ணறிவு எவ்வாறு செயல்படுகிறது?

இ) உயர்வகைத்திறன் பேசிகளில் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பம் எது?

30.**'தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்'** இடம் சுட்டிப் பொருள் விளக்குக.

31. சோலைக் (பூங்கா) காற்றும் மின்விசிறிக் காற்றும் பேசிக்கொள்வது போல் ஓர் உரையாடல் அமைக்க.

பிரிவு – 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும். வினா எண் 34க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** 2X3=6

32.தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுறமொழியும் பாங்கினை விளக்குக.

33.வைத்தியநாதபுரி முருகன், அணிந்திருக்கும் அணிகலன்களுடன் குழந்தையாகச் செங்கீரை ஆடிய நயத்தினை விளக்குக.

34.**அடிபிறழாமல் எழுதுக.**

அ) 'அன்னை மொழியே' எனத் தொடங்கும் மொழி வாழ்த்து. (அல்லது)

ஆ) 'தண்டலை மயில்களாட' எனத்தொடங்கும் கம்பராமாயணப் பாடல்.

பிரிவு – 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** 2X3=6

35.அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல் – திருக்குறளுக்கு அலகிட்டு வாய்பாடு தருக.

36.கவிஞர் தாம் கூறவிரும்பும் கருத்திற்கு ஏற்றவாறு தற்குறிப்பேற்ற அணி அமைவதை எழுதுக.

37.வெண்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.

பகுதி – IV (மதிப்பெண்கள்:25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** 5X5=25

38. அ) கருணையனின் தாய் மறைவுக்கு, வீரமாமுனிவர் தம் பூக்கள் போன்ற உவமைகளாலும், உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரிக்க. (அல்லது)

ஆ) மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்து பாடலையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக.

39. **அ) உங்கள் தெருவில் மின்விளக்குகள் பழுதடைந்துள்ளன. அதனால் இரவில் சாலையில் நடந்து செல்வோர்க்கு ஏற்படும் இடையூறுகளை எழுதி. ஆவண செய்யும்படி மின்வாரிய அலுவலருக்குக் கடிதம் எழுதுக.** (அல்லது)

ஆ) **வெள்ளத்தில் சிக்கிய குழந்தையைக் காப்பாற்றியதாக** மாவட்ட ஆட்சியரிடம் பாராட்டும் விருதும் பெற்ற உங்கள் தோழனைப் பாராட்டி, அவருக்குக் கடிதம் ஒன்று எழுதுக.

40.**காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**



Scanned with CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com

41. 79,பாரதியார் நகர், திரு. வி. க. தெரு, பூஞ்சோலை, கடலூர் மாவட்டம் – 10 என்ற முகவரியில் குடியிருக்கும் இளங்கோ என்பவரின் மகள் பூந்தளிர், அப்பகுதியிலுள்ள அரசு உயர்நிலைப்பள்ளியில் 10 ஆம் வகுப்பு முடிந்திருக்கிறார். அவர், அதே ஊரில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் 11ஆம் வகுப்பில் சேர விரும்புகிறார். தேர்வர் தன்னை பூந்தளிராக் கருதி, கொடுக்கப்பட்ட மேல்நிலை சேர்க்கை விண்ணப்பப் படிவத்தினை நிரப்புக.

42. அ) அன்றாட வாழ்வில் நீங்கள் செய்த, பார்த்த உதவிகளால் எய்திய மனநிலையைப் பட்டியலிடுக.(அல்லது)

ஆ) தமிழில் மொழிபெயர்க்க.

The Golden sun gets up early In the morning and starts its bright rays to fade away the dark. The milky clouds start their wandering. The colourful birds start twitting their morning melodies in percussion. The cute butterfiles dance around the flowers. The flowers fragrance fills the breeze. The breeze gently blows everwhere and makes everything pleasant.

குறிப்பு : செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்றுவினா.

உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

தற்காலத்தில் வெளிவருகின்ற சில உயர்வகைத் திறன்பேசியின் ஒளிப்படக் கருவி, செயற்கை நுண்ணறிவுத் தொழில் நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. கடவுச் சொல்லும் கைரேகையும் கொண்டு திறன்பேசியைத் திறப்பது பழமையான முறையாகும். உரிமையாளரின் முகத்தை அடையாளம் கண்டு திறப்பது, இன்றைய தொழில்நுட்பம். இது படம் எடுக்கும் காட்சியை அடையாளம் கண்டு அதற்கு ஏற்பத் தன்னைத் தகவமைத்துக்கொள்கிறது. திறன்பேசிகளில் உள்ள ஒளிபடக் கருவியில், எடுக்கும் படங்களை மெருகூட்ட இத்தொழில்நுட்பம் உதவுகிறது. காணொலிகளைத் தொகுக்கும் மென்பொருள்களில் இன்றைக்குச் செயற்கை நுண்ணறிவுக் தொழில்நுட்பம் பயன்படுகிறது இதனால் பெருமளவில் நேரம் வீணாவாது தவிர்க்கப்படுகிறது.

வினாக்கள்:

i) காணொலிகளைத் தொகுக்கும் மென்பொருள்களில் பயன்படும் தொழில்நுட்பத்தைக் குறிப்பிடுக?

ii) செயற்கை நுண்ணறிவு, திறன்பேசியில் படங்கள் எடுப்பதற்கு எப்படி உதவுகிறது?

iii) திறன்பேசியைத் திறக்கும் பழைய முறைகள் எவை?

iv) திறன்பேசியைத் திறக்கப் பயன்படும் இன்றைய தொழில்நுட்பம் எது?

v) பத்திக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்று தருக.

## பகுதி – V

அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும். 3X8=24

43. அ) வீட்டில் திண்ணை அமைத்த காரணம், விருந்தினர் பேணுதல், தமிழர் பண்பாட்டில் ஈகை, பசித்தவருக்கு உணவிடல் – இவை போன்ற அன்றைய செயல்கள் குறித்தும் இக்காலத்தில் விருந்தினருக்குச் செய்யும் விருந்தோம்பல் குறித்தும் விவரித்து எழுதுக. (அல்லது)

ஆ) ஜெயகாந்தன் நினைவுச் சிறப்பிதழை, வார இதழ் ஒன்று வெளியிட இருக்கிறது. அதற்கான ஒரு சுவரொட்டியை வடிவமைக்க.

44. அ) 'கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே என்கிறது வெற்றி வேற்கை'. மேரியிடமிருந்து பறிக்கபட்ட புத்தகம் அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச்சுடரை ஏற்றிய கதையைப் பற்றிய உங்களின் கருத்துகளை விவரிக்க. (அல்லது)

ஆ) 'அழகிரிசாமியின்' ஒருவன் இருக்கிறான் சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதை மாந்தர் குறித்து விவரித்து எழுதுக.

45. அ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதி, தலைப்பு ஒன்று தருக.

குறிப்புகள்: முன்னுரை – சுற்றுச் சூழல் – நிலம், நீர், காற்று மாசு – சுற்றுப்புறத் தூய்மையே வாழ்வின் வளம் – நம் கடமை – முடிவுரை. (அல்லது)

ஆ) உங்கள் பகுதியில் நடைபெற்ற அரசுப் பொருட்காட்சிக்கு நீங்கள் சென்று வந்த நிகழ்வைக் குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரையாக எழுதுக.

குறிப்புகள் : முன்னுரை – அரசு பொருட்காட்சிக்கான இடமும் அமைப்பும் – பல்வகை அங்காடிகள் – உணவுக் கூடங்கள் – போக்குவரத்துத்துறை – விளையாட்டு அமைவிடங்கள் – முடிவுரை.

Scanned with CamScanner
Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com

# மேல்நிலை வகுப்பு - சேர்க்கை விண்ணப்பம்

சேர்க்கை எண்: தேதி: வகுப்பும் பிரிவும்:

1. மாணவர்/ மாணவியின் பெயர் :
2. பிறந்த தேதி :
3. தேசிய இனம் :
4. பெற்றோர் / பாதுகாவலர் பெயர் :
5. வீட்டு முகவரி :
6. இறுதியாகப் படித்த வகுப்பு :
7. பயின்ற மொழி :
8. பெற்ற மதிப்பெண்கள் :
9. இறுதியாகப் படித்த பள்ளியின் முகவரி :

| தேர்வின் பெயர் | பதிவு எண் – ஆண்டு | பாடம் | மதிப்பெண் (100) |
|---|---|---|---|
| | | தமிழ் | |
| | | ஆங்கிலம் | |
| | | கணிதம் | |
| | | அறிவியல் | |
| | | சமூக அறிவியல் | |
| | | மொத்தம் | |

10. மாற்றுச் சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளதா? :
11. தாய்மொழி :
12. சேர விரும்பும் பாடப்பிரிவும் பயிற்றுமொழியும் :

மாணவ / மாணவியின் கையொப்பம்

akwaacademy.blogspot.com
www.Padasalai.Net
Scanned with CamScanner